Registered as a Newspaper

மிகக் குறுகிய காலத்தில் சிறந்த கணக்காய்வாளராக விரும்புகிறீர்களா? நாலாம் பக்கம் பாருங்கள்!


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ.1/-

கடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸூ கார்த்திகை மீ 25 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 08 (11-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 13


To become an efficient and dynamic Accountant: Refer Page Four

# சிங்கள மாகாணசபை கிழக்கில் வேண்டாம்

## ஜே. ஆரை இன்று சந்தித்து பதியுதீன் வலியுறுத்துவார்

கொழும்பு, டிச. 11

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மாகாணசபை வேண்டாம்— இப்படி ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்ஸில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் இன்று வலியுறுத்தும்.

முன்னாள் கல்விஅமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் தலைமையில் முஸ்லிம் கவுன்ஸில் தூதுக்குழு ஒன்று இன்று வியாழன் காலை ஜனாதிபதியைச் சந்திக்கின்றது.

அப்போது கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாண சபைகளாகப் பிரிக்கும் திட்டத்தை எதிர்க்கும் முடிவை ஜனாதிபதிக்கு முஸ்லிம் கவுன்ஸில் தூதுக்குழு சமர்ப்பிக்கும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழருக்கு ஒரு மாகாண சபை, முஸ்லிம்களுக்கு ஒரு மாகாண சபை மட்டுமே அமைக்கப்பட வேண்டும்.

சிங்களப் பகுதிகளை வடமத்திய மாகாணத்துடன் இணைக்க வேண்டும்.

கிழக்கில் உள்ள சிங்களவர்களுக்கு என்று தனி மாகாணசபை அமைக்கக்கூடாது.

மேற்கண்ட கருத்தை முஸ்லிம் கவுன்ஸில் தூதுக்குழு ஜனாதிபதி முன் வலியுறுத்தவுள்ளது. (இ-எ)

## ● வங்கி முகாமையாளர் சுட்டுக் கொலை

சென்னை, டிச. 10

தமிழ்நாடு, புதுக்கோட்டையில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முகாமையாளரும் எழுதுவினைஞரும் இனந்தெரியாதவர்களினால் இன்று காலை சுட்டுக்கொல்லப் பட்டனர்.

தாடிவைத்த நபர்களினால் இவர்கள் இரண்டு பேரும் அலுவலகத்தினுள் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## ரூபா 25 ஆயிரம் நவீல்ட் பாடசாலைக்கு!

யாழ்ப்பாணம், டிச. 11

தமிழீழ போர் நிதிக்கான இரண்டாவது அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை மூலம் கிடைத்த பணத்திலிருந்து ரூபா 25 ஆயிரம் கைதடி நவீல்ட் சிறுவர் பாடசாலைக்கு வழங்கப்படும்.

நேற்று மாலை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்றலில் இந்தச் சீட்டிழுப்பு தமிழீழ இராணுவத்தினரால் நடத்தப்பட்டது.

பெருந்திரளான மக்கள் சீட்டிழுப்பு முடிவுகளை உடனடியாக அறிந்துகொள்வதில் ஆர்வம்காட்டி கொக்குவிலில் திரண்டிருந்தனர்.

முதலாவது தமிழீழ போர் நிதியிலிருந்து ரூபா 25 ஆயிரத்தை கடந்த மாதம் யாழ் ஆஸ்பத்திரிக்கு தமிழீழ இராணுவம் வழங்கி வழங்கியிருந்தது.

தமிழீழ போர் நிதிக்கான மூன்றுவது சீட்டிழுப்பு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி கன்னாகத்தில் வைத்து அதிஷ்டம் பார்க்கப்படும். (ஒ)

## சிறந்த பத்திரிகையாளர் விருது

கொழும்பு, டிச. 11

சிறந்த பத்திரிகையாளர் விருது ஒன்றை அடுத்த ஆண்டில் இருந்து வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

"தங்கப்பேனா" பத்திரிகையாளர் எஸ்மண்ட் பெர்னாண்டோ நினைவாக இவ்விருது வழங்கப்பட வேண்டும் என்று பிரத

(4 ஆம் பக்கம் பார்க்க)

**முச்சந்தி முனி**



அப்ப, இந்தியாவிலை இனிச் குடும்ப இரகசியங்களைக் கூட நேரிலை போய்த்தான் சொல்ல வேணும் பின்னை...!

## ராஜாஜியின் 108 ஆவது பிறந்த தினம்

சென்னை, டிச. 10

ராஜாஜியின் 108 வது பிறந்ததினம் தமிழ்நாட்டில் கொண்டாடப் பட்டது.

ராஜாஜியின் சிலைக்கு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ம. பொ சிவஞானகிராமணியார், தமிழக அமைச்சர்கள் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

புதுடில்லியில்பாரதியா வித்தியா பவனிலும் ராஜாஜியின் பிறந்த தினம் கொண்டாடப் பட்டது. (இ-எ)

### கருணாநிதி கைதை அடுத்து

## தமிழகத்தில் உஷார் நிலை! சென்னையில் பஸ்கள் எரிப்பு

சென்னை, டிச. 10

தமிழ்நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன.

தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி கைதானதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பரவலாக வன்செயல்கள் இடம் பெறுவதைத் தொடர்ந்து. பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தும்படி, மாநிலஅரசு பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

உள்துறை அமைச்சுச் செயலாளர் திரு. டி. வெங்கட்ரரமன் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிக்கிறார்.

பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிக்கும் செயலைக்கட்டுப்படுத்தவே பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படும்

இப்படி சென்னைநகர பொலீஸ் ஆணையாளர் டபிள்யு. தேவாரம் சென்னார்.

தி மு.க தலைவர் கருணாநிதி கைதான தினத்தன்று சென்னைநகரில் மட்டும் 3 பஸ்கள் எரிக்கப்பட்டன. இது சம்பந்தமாக ஆறு பேர் கைது செய்யப் பட்டனர்

இச்சம்பவத்தைத்தொடர்ந்து போக்குவரத்துச் செய்யும் பஸ்களில் சிவில் உடையில் ஆயுதம் தரித்த பொலீஸார் பயணம் செய்து வருகின்றனர் என்று பொலிஸ் ஆணையாளர் தெரிவித்தார். (இ-எ)

## மாணவர் கைது, விடுவிப்பு குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், டிச. 11

துண்டுப்பிரசுரம் விநியோகித்த இரு மாணவர்களைக் கைது செய்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி. ஆர். எல். எவ்) அவர்களை விசாரணையின் பின்னர் விடுவித்ததாக நேற்றிரவு அறிவித்தது.

இது சம்பந்தமாக ஈ.பி ஆர். எல். எவ். விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

செவ்வாய்க்கிழமை மாலை ஐந்து மணியளவில் "பொலிகளின் முகத்திரை கிழித் தெறியப்பட்டது" என்ற தலைப்பிட்டு கல்வியங்காடு, கட்டைப்பராய், இருபாலை மக்கள் என ஒப்பமிடபட்ட துண்டுபிரசுரங்கள் விநியோகித்த இருவரை நாம் கைது செய்தோம்.

இத் துண்டுப்பிரசுரம் யாழ், பல்கலைக்கழக மாணவர்களின் பாதயாத்திரை கட்டப்பராயில் வழிமறிக்கப்பட்ட சம்பவத்தில்நாம் நடந்து கொண்டமையை திரிவுபடுத்தியும் எமது ஸ்தாபனத்தை அவதூறு செய்யும் வகையிலும்பல்கலைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ● தபால்களை உடைக்க சட்டமூலம்

புதுடில்லி, டிச. 10

பொது நலன் கருதி தபால்களை உடைத்துப் பார்க்கும் அதிகாரத்தை அரசாங்கத்துக்கு வழங்கும் சட்டமூலம் ஒன்றை இந்திய நாடாளுமன்றம் இன்று நிறைவேற்றியது. (இ-எ)

# பலாலி, பருத்தித்துறைவீதிகளில் மக்கள் வழி மறிப்பு இயக்கம்

## மாணவர் கைதானதை ஆட்சேபித்து

யாழ்ப்பாணம், டிச.11

பலாலி, பருத்தித்துறை வீதிகளில் பொது மக்கள் நேற்றுக் காலை முதல் இரவுவரை வழி மறிப்பு இயக்கம் நடத்தினர்.

கல்வியங் காடு, கட்டைப்பராய், திருநெல்வேலி கோப்பாய், கோண்டாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே வழி மறிப்பு இயக்கத்தை நடத்தினர்.

துண்டுப்பிரசுரம் விநியோகித்த இரண்டுமாணவர்களை போராளிகள் இயக்கம் ஒன்று கைது செய்ததை ஆட்சேபித்தே வழிமறிப்பு இயக்கம் நடத்தப்பட்டது.

கட்டைப்பிராயைச் சேர்ந்த குணம்,கல்வியங்காட்டைச் சேர்ந்த றூபன் ஆகிய மாணவர்களே கைதாகினர்

இதனை ஆட்சேபித்து இருபாலையில் இருந்து கல்வியங்காடு சட்டநாதர் ஆலயம்வரைஉள்ள பருத்தித்துறை வீதியும், கோண்டாவிலில் இருந்து காலைசாலை சந்திவரை உள்ள பாலாலி வீதியும் மக்களால் நேற்றுக்காலை சுமார் பத்து மணி தொடக்கம் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டன.

இதனை அடுத்து பருத்தித்துறை வீதியூடாக செல்லும் வாகனங்கள் அனைத்தும் இராச வீதி ஊடாகவும், பலாலி வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் பிறவுண் வீதியுடாகவும், வேறு வீதிகளாலும் நேற்று போக்குவரத்துக்களை நடத்தின.

சம்பந்தப்பட்ட இரு மாணவர்களும் "போலிகளின் முகத்திரை கிளித்தெறியப்பட்டது" என்னும் தலைப்பிலான துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்து வந்தனர்.

வீதிகளின் குறுக்கே பாரிய மரக்குத்திகளும் பழைய வாகனங்களும் போடப்பட்டிருந்தன.

நேற்று இரவு ஏழுமணி வரை இந்த வீதித்தடை அகற்றப்படவில்லை. (அ-10)

## மேலும் 88 தி. மு. க. தொண்டர் கைது

மதுரை, டிச. 10

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தி. மு. க. தலைவர் கருணாநிதியைக் கைது செய்ததை ஆட்சேபிக்கு முகமாக மதுரையில் மறியல் செய்த சட்டசபை உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் உட்பட 88 தி. மு. க. தொண்டர்கள் இன்று பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். (இ-எ)

## நிலத்தில் இருந்து பணி புரிகிறார்கள் வங்கி ஊழியர்கள்

யாழ்ப்பாணம், டிச. 11

கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளை ஊழியர்கள் பரந்தனில் தளபாட வசதிகளெதுவும் இன்றிநிலத்தில் இருந்து கடமை புரிகின்றனர்.

ஆறுமாத காலமாக பூட்டிக் கிடந்த கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளை கடந்த திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஊழியர்கள் சென்று பரந்தன் சந்தியில் முகாமையாளருக்காக காத்திருந்தனர்.

முகாமையாளரும்; மாவட்ட முகாமையாளரும் வந்த போது போராளிகளும் வந்தனர்.

கரடிப்போக்கில் பாதுகாப்பற்ற நிலை உள்ளதால் ஊழியர்களை அங்கே

(4-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை எழுத மாணவர் விடுதலை

யாழ்ப்பாணம், டிச. 11

குமுழமுனையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவன் ஜீ.சி.ஈ.பரீட்சை எழுதுவதற்காக விடுதலை செய்யப்பட்டார்.

நடராசா லோகேஸ்வரன் (21 வயது) என்ற இளைஞனே கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் ஆவார்.

கடந்த 23ஆம் திகதி குமுழமுனையில் இந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

எனினும் வவுனியா மாவட்ட பிரசைகள் குழுத் தலைவர் டாக்டர் எஸ். வி. பரராசசிங்கம் வவுனியா மாவட்ட இணைப்பதிகாரியுடன் விசேஷமாகத் தொடர்பு கொண்டு விடுத்த வேண்டுகோளுக் கிணங்கவே இவர் விடுதலை செய்யப்பட்டார். (இ-10)

## சுவீப் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிச. 11

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்றலில் நேற்று மாலை தமிழீழ இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தமிழீழப் போர் நிதி இரண்டாவது அதிஷ்டலாபச் சீட்டு முடிவுகள் விபரம் வருமாறு:-

முதலாவது பரிசு:
Y 202877 ரூ 50,000/-

இரண்டாவது பரிசு:
J 202976 ரூ 25,000/-

மூன்றுவது பரிசு:
J 201400 ரூ 15,000/-

நான்காவது பரிசு:
V 201586 ரூ 7,500/-

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

11—12—1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.49 முதல் 9.19 வரை
ராகுகாலம்:
1.49 முதல் 3.19 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
திருவெம்பாவை நான்காம் நாள்

### 1987 இல் யாழ்ப்பாணத்தில்

## ரூ75இலட்சம் செலவில் பிரதான வீதிகள் திருத்தப்படும்

யாழ்ப்பாணம், டிச.11

1987ஆம் ஆண்டு முற்பகுதியிலேயே யாழ் வீதிகளைத் திருத்தும் வேலை இனி ஆரம்பமாகும்.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து 75 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ் செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. சு. சிவதாசன் இதனைத்தெரிவித்தார்.

1986-ஆம் ஆண்டுக்கான வேலைகள் யாவும் நவம்பர் மாதத்துடன் முடிந்துவிட்டன.

203 லட்சம்ரூபா செலவில் இந்த ஆண்டு வீதிகள் திருத்தப்பட்டன.

அடுத்த ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் சென்ற ஜூலை மாதத்திலேயே தயாரிக்கப் பட்டுவிட்டன.

கற்கள், மணல் என்பன ஏற்கனவே பறிக்கப் பட்டுள்ளன. அடுத்த ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்தில் 9வீதிகளின் வேலைகள் ஆரம்பமாகும்.

அவற்றுள் புத்தூர்—கந்தரோடை வீதி, கிளாலி வீதி, கட்டுவன்—மல்லாகம் வீதி, யாழ்—பருத்தித்துறைவீதிவலை—உடுப்பிட்டி—வல்வெட்டித்துறை வீதி, புலோலி—கொடிகாமம் வீதி என்பன அடங்கும்.

வாகன நெருக்கம் உள்ள பிரதான வீதிகளே முதலில் திருத்தப் படும்.

மொத்தம் 28 வீதிகள் திருத்தப்படவுள்ளன.

பெரும்பாலான வீதிகள் யாவும் புதிதாக சீராக போடப்படவுள்ளன

சிறுசிறு பழுதுள்ள வீதிகளுக்கு பராமரிப்பு வேலைகள் நடைபெறும்.

பெருந்தெருக்கள் அமைச்சு 1987க்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் மேலதிக வீதிகள் திருத்தப்படும்.

இவ்வருடம் அமைச்சு 108 லட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தது.

மேலதிகவீதிகளை திருத்துவதற்கான வேலைத்திட்டத்தை நாம் அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம்.

இவ்வாறுபிரதிப்பணிப்பாளர் கூறினார். (இ-5)

## டிக்ஸிற் டில்லி விரைவு

கொழும்பு, டிச. 11

இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் கடந்த செவ்வாய் இரவு திடீரென்று புதுடில்லி விரைந்தார்.

கொழும்புவர உள்ள இந்திய அமைச்சர் குழுவிற்கு இலங்கையின் பிந்திய நிலைப்பாடு குறித்து விவரிப்பதே அவரின் பயணத்தின் நோக்கம் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ-1)

# பஸ் ஊழியர் கொலை பற்றி நீதி விசாரணை

## பிரசைகள் குழுச் செயலாளர் கோரிக்கை

மட்டக்களப்பு, டிச. 11

காத்தான்குடியில் பஸ் ஊழியர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுவரை ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திருப்பிப் பெறப்பட வேண்டும்.

இப்படி மட்டக்களப்பு பிரசைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து தெரிவித்தார்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் சமாதானக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

மட்டக்களப்புப் பதில் அரசாங்க அதிபர் திரு. எம். செல்வரத்தினம் தலைமை வகித்தார்.

அக் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. சாம் தம்பிமுத்து முன்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

முதலில் மட்டக்களப்பு இரண்டாளது எம்.பி. ரிஸ்வி சின்ன லெப்பை பேசினார்.

அச்சமயம் அவர் சொன்னதாவது;

ஊர்காவல் படை ஊர் மக்களைப் பாதுகாக்கவே அமைக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் வருடும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதியில் மீண்டும் சட்டவிரோத மின்பாவனை

ஊர்காவற்றுறை, டிச.11
தீவுப்பகுதியில் மீண்டும் சட்டவிரோத மின் பாவனை அதிகரித்துள்ளது குறித்து இலங்கை மின்சார சபையின் வேலணைப் பிராந்திய மின்சார அத்தியட்சகர் திரு. மார்க்கண்டு விஜயசிறி கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் உதயனுக்குத் தகவல் தருகையில் சில மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோத மின்பாவனை காரணமாக தீவுப்பகுதிக்கான மின்சாரத்தை வழங்கும் பொன்னாலை மின்மாற்றி சேதமடைந்தது.

மின்சார இணைப்புக் கம்பிகளும் அறுந்து விழுந்தன.

ஆனாலும் இலங்கை மின்சார சபை ஊழியர்களினாலும் அதிகாரிகளினாலும் உடனடியாக புதிய மின்மாற்றி இணைக்கப்பட்டது.

அத்துடன் அனைத்து விடுதலை ஸ்தாபனங்களின் உதவியோடு மின்சாரசபை அதிகாரிகளும் ஊழியர்களும் இப்பகுதியில் காணப்பட்ட சட்டவிரோத இணைப்புக்களை துண்டித்தனர்.

நாலைந்து மாதங்கள் கழிய மீண்டும் இப்போது தீவுப்பகுதியில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளது.

இப்படி அவர் கூறினார். (இ-16)

## மாணவர் போராட்டத்தை மதிக்கத் தவறுவோர் தூக்கி எறியப்படுவர்

யாழ்ப்பாணம், டிச. 11
எமது தேசத்தின் எல்லைக்குள்ளே நடைபெறும் மாணவ போராட்டத்தை மதிக்கத் தவறுபவர்கள் என்றாவது ஒரு நாள் தூக்கி எறியப்படுவார்கள்.

பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழு சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


பிரான்ஸில் 5 லட்சம் மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களின் இறுதியில் பிரெஞ்சு அரசு மாணவரின் கோரிக்கையை ஏற்று புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் பெற்றது.

பிரான்ஸின் பிற்போக்கு முதலாளித்துவ அரசையே இப் போராட்டம் நிலைகுலைத்திருக்கிறது.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

கண்ணீர் சிந்தும் எண்ணக் குமுறலின்

## இரண்டாம் ஆண்டு நினைவு



### மனுவேற்பிள்ளை டேவிற் பாலேந்திரன்

11 . 12 : 1986

பிறப்பு: 15 - 05 - 1961 இறப்பு: 11 - 12 - 1984

அன்பர்கள் அனைவோர்க்கும்
உற்றார் உறவினர்க்கும்
வாழ்விலும் தாழ்விலும்
தாளாது துணைநின்றாய்
இன்பத்தில் மகிழ்வானாய்
துன்பத்தில் துணையானாய்
ஆயின்
மரணத்துள் தனியானாய்
கண்ணே பாலுக்குட்டி,
எம் நெஞ்சினிலே நினைவாக
நின்றிடுவாய் எப்போதும்
ஆண்டவர்தம் ஜோதியிலே
ஆழ்ந்திட நீ வேண்டுமென்று
அவர் பாதம் பற்றிநாம்
ஆவலுடன் இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்னை, தந்தை, சோதரர், உறவினர், அன்பர்கள்-

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.

## செய்திக்கொத்து

### திருநாவுக்கரசு மகாவித்தியாலய கட்டடம்

கொடிகாமம், டிச.11
கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துக்கு சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் கட்டடம் பூர்த்தி அடைந்து வருகிறது. (இ-75)

### கலைவிழா

சாவகச்சேரி, டிச. 11
சாவகச்சேரி அம்பிகா அறவழிப் பாலர் கழகத்தின் கலைவிழா திரு ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெற்றது

சட்டத்தரணி திரு. சு. கந்தசாமி வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (இ-31)

### மாடுகள் ஏலம்

வேலணை, டிச. 11
வேலணை கமநலசேவை நிலையத்தால் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் தற்பொழுது பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டு வருகின்றன. (இ-167)

### புங்குடுதீவில் மாணவர் தினம்

புங்குடுதீவு, டிச. 11
பாடசாலை மாணவர்களது திறமைகளைப் பாராட்டுமுகமாகவும், அவர்களது பணிகளை உணரச்செய்யும் வகையிலும் மாணவர் தினம் ஒன்றினை எதிர்வரும் ஜனவரிமாதம் 15-ந் திகதி அனுஷ்டிப்பதெனப் புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாலய ஆசிரியர் மன்றம் தீர்மானித்துள்ளது

பாடசாலை வாரத்தின் போது சிறப்புறச் சேவையாற்றும் மாணவர்களுக்கு இத்தினம் பாராட்டு அளிக்கப்படும் (இ-131)

### பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

வேலணை, டிச. 11
வேலணை மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படும் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி அண்மையில் நிலைய நிர்வாகிகள், உறுப்பினர்கள் ஒத்துழைப்புடன் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது.

செல்வி ஆ. இரஞ்சித மலர் தலைமையில் நடைபெற்றவிளையாட்டு விழாவில் தீவகமாதர் அணித் தலைவி, வேலணை தெங்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் உட்பட பலர் சிறப்புரையாற்றினார்கள். (இ-167)

### மக்கள் முகம்

### கிளாலி கிராம அபிவிருத்தி சபை

கொடிகாமம், டிச.11
எழுதுமட்டுவாளைச் சேர்ந்த கிளாலி கிராம அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் வருமாறு:—

தலைவர்: திரு. பே. யேசுதாசன் உப தலைவர்கள்: திரு. க. காசிப்பிள்ளை, திரு. சி. அந்தோனிப்பிள்ளை செயலாளர் திரு. ம. யேசுதாசன் பொருளாளர் திரு. பி. மரியாம்பிள்ளை

நிர்வாக சபை உறுப்பினர் 7 பேர். போஷகர் திரு அ அல்பிறட் (இ-75)

### அகதிகள் இடமாற்றம்

வல்வெட்டித்துறை, டிச 11
உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் தங்கியிருந்த தொண்டமனாறு, கெருடாவில், மயிலியதனை அகதிகள் இமையாணன் அரசினர் பாடசாலைக்கு இடமாற்றப்பட்டனர்.

உடுப்பிட்டி, அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் ஜீ சி. ஈ. பரீட்சை நடைபெறுவதே இதற்குக் காரணம். (இ-160)

### சேவை காலப் பயிற்சி

அச்சுவேலி, டிச 11
5ஆம், 6ஆம் ஆண்டு மாணவர்களுக்கு ஆங்கிலம்போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப்பயிற்சி யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இம்மாதம் 16ஆம் திகதிதொடக்கம் 19ஆம் திகதிவரை நடைபெறும்.

கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய கல்விவட்டாரப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்த சேவைகால பயிற்சிவகுப்பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-11)

## காரைநகர் பகுதி மீனவருக்குநிவாரணம் வழங்கப்படவில்லையாம்

வட்டுக்கோட்டை டிச.11
காரைநகர் தோப்புக்காடு, மடத்து வளவு, ஊரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளர்களுக்கான நிவாரண முத்திரைகள் (மீன்பிடி முத்திரை) கடந்த 3 மாதங்களாக வழங்கப்படாததால் இத்தொழிலாளர்கள் பெரிதும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

கிராமத்துக்குக் கிராமம் வேறுபாடு காட்டாது சகல கிராம மீன்பிடித் தொழிலாளர்களுக்கும் இந்த நிவாரண உதவிகளை நிலுவையுடன் வழங்கவேண்டும் என திணைக்களத்தினரை தொழிலாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (இ-161)

### சாவகச்சேரி நீதிபதி

யாழ்ப்பாணம், டிச.11
காவலூர் மாவட்ட நீதிபதி திரு. பொ. பாலவடிவேலு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றலாகிப் பணிபுரிகின்றார். (இ-75)

## ஜனநாயக அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பு தேவை - ஈரோஸ்

யாழ்ப்பாணம், டிச 11
பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய பாதயாத்திரை பல்வேறு இடங்களிலும் குழப்பப்பட்டது வேதனைக்குரியது. மட்டுவிலிலும், தீவுப்பகுதியிலும், சரவெட்டியிலும், கட்டப்பராயிலும நடந்த சம்பவங்கள் மனிதநேயத்தையும், விடுதலையையும் விரும்பும் எவராலும் கண்டிக்கப்பட வேண்டியவை.

இப்படி ஈரோஸ் அறிக்கை விடுத்துள்ளது.

காணமற்போன விஜிதரனைக் கண்டுபிடிக்கத் தவிக்கும் பல்கலைக்கழக மாணவர்களின் கவலையை உணர்ந்து கொள்ளாமல் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு விடுக்கப்பட்டு வரும் சவாலைக் கண்டுகொள்ளாமல் நிராயுதபாணிகளாகப் போராடிவரும் மாணவர்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் எமது மக்களின் பண்பாடு, கலாசாரம் போன்ற பாரம்பரியப் பெருமைகளுக்கே கேடு விளைவிப்பன ஆகும்.

மேலும், பேச்சுவார்த்தை நெருக்கடிகள் ஒருபுறமும், இராணுவக் கெடுபிடிகள் மறுபுறமுமாக உந்தித் தள்ளிவரும் இன்றைய சூழ்நிலையில் ஆபத்தை உணர்ந்து- இயக்க மோதல்கள் ஏற்படுவது தவிர்க்கப்படடும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### சைவசமய பரீட்சை முடிவுகள்

வட்டுக்கோட்டை, டிச. 11
காரைநகர் மணிவாசகர் சபையினர் நடத்திய சைவசமயப் பரீட்சை முடிவுகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கான பரிசில்கள் மணிவாசகர் விழாவில் வழங்கப்படவுள்ளன.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்தி பரிசில்களையும் வழங்குவார்.

மாணவர்களுக்கு பொற்கிழியும் சமய நூல்களும் பரிசில்களாக வழங்கப்படும். (இ-161

### இருவரின் சடலங்கள்

கொழும்பு டிச 11
கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் இரண்டு பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

கடந்த வாரம் கொழும்பு பேலியகொடையில் வைத்து பிரபலகேடியான அர்ச்சுன கொல்லப்பட்டதன் பின்னர் நடந்த பழிவாங்கலாகவே இந்த இரண்டு பேரும் கொல்லப்பட்டு

## உரிய பருவத்தில் அடிப்படை அறிவு தேவை

வட்டுக்கோட்டை. டிச11
அடிப்படை அறிவானது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. இந்த அடிப்படை அறிவு இல்லாத எந்த ஓர் அபிவிருத்தி வேலையும் பூரணத்துவம் பெறமாட்டாது. எனவே எதிர்கால நற்பிரஜைகளாக விளங்கவுள்ள இளைய தலைமுறையினர் உரிய பருவத்தில் அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தவித்தியாலயத்தில் நடைபெற்ற நட்புறவு மதியபோசன வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பொறியியலாளர் திரு. எஸ். ஆனந்தராஜன் மேற்கண்டவாறு கூறினார்

வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலய மணிவிழாச் சபை, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் ஆகியவை இணைந்து நடத்திய இவ்வைபவத்திற்கு அதிபர் திரு. சு. சிவவாகீசர் தலைமைவகித்தார்.

பொறியியலாளர் திரு. ஆனந்தராஜன் தொடர்ந்து உரையாற்றும் போது மாணவர்கள் ஒவ்வொருவரும் உரிய பருவத்தில் கல்விப் பின்படிப்பாக தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பயிர்ச் செய்கை உத்தியோகத்தரும் பழைய மாணவருமான திரு. ஜி. சிதம்பரநாதன் உரையாற்றும் போது இப் பாடசாலை வரலாற்றிலே அதிபர் சுப்பிரமணியத்தின் காலம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது என்றார்.

வித்தியாலய உப அதிபர் திரு. வி. சிவஞானபோதன், வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை, சுழிபுரம் உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்டஉத்தியோகத்தர் திரு. தா. தங்கராசா. வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத் தலைவர் திரு. ந. சபாரத்தினசிங்கம், இளைப்பாறிய ஆசிரியர் திரு. க செல்லையா ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (இ-161)

### அக்கராயனில் மது, புகைத்தல் ஒழிப்பு கூட்டம்

கொடிகாமம், டிச. 11
அக்கராயன் மகாவித்தியாலயத்தில் மது ஒழிப்பு, புகைத்தல் ஒழிப்புப்பற்றி பிரசாரக் கூட்டமொன்று நடைபெற்றது.

கொத்தணி அதிபர் வரணியூர் திரு. சி. துரைராசா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

ஸ்கந்தபுரம், கோணாவில், வன்னேரிப் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர் ஊர்வலமாக வந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அபிருத்திச் சபைச் செயலாளர் திரு. எஸ். சின்னத்தம்பி நன்றி தெரிவித்தார். (இ-75)

## பஸ் நிலைய மலசல கூடம் இரு மாடி கொண்டதாக அமைய வேண்டும்

### வரியிறுப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 11
யாழ் பஸ் நிலைய உத்தேச மலசல கூடம் இரு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

யாழ் மாநகர வரியிறுப்பாளர் சங்கம் யாழ் மாநகர சபை ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதம் விவரம் வருமாறு:—

பொது மக்களின் நலனை முன்னிட்டு மீண்டும் யாழ் பஸ் நிலையத்தில் மலசல கூடம் அமைக்கப்பட இருப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

எதிர்கால நகர வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், இடநெருக்கடியைக் கருத்தில் கொண்டும் யாழ் பஸ் நிலையத்தில் அமைய இருக்கும் மலசல கூடம் இருமாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

அதன் கீழ்ப்பகுதியை பெண்கள் பயன்படுத்தக்கூடியதாகவும் மேல் பகுதியை ஆண்கள் பயன்படுத்தக்கூடியதாகவும் அமைக்க முடியும்.

இதற்கு மேல் இதற்கான நீர் தாங்கியையும் நிர்மாணிக்கலாம். இந் நீர் தாங்கிக்கு ஓர் குழாய்க் கிணறை அமைத்து நீர் வழங்க முடியும்.

நீ யணைப்பு தேவைகளுக்கும் மற்றும் நீர் தேவைகளுக்கும் இக் குழாய்க் கிணற்றிலிருந்து நீர் பெற்றுக் கொள்ள முடியும்

மலசலகூட கழிவுகளுக்கு பிரத்தியேகக் குழாய்கள் அமைக்கப்படாது, நவீன சந்தைக் கட்டடத்தின் மலசல கூட கழிவு குழியினுள் இவற்றை விட முடியும்.

மேற் குறிப்பிட்டுள்ள நியாயபூர்வமான ஆலோசனைகளை இம் மலசல கூடம் அமைக்க முன்பு ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு தயவுடன் கேட்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழ் மரபை, சைவப் பண்பாட்டை பேணிப் பாதுகாப்போம்

### விரிவுரையாளர் உரை

யாழ்ப்பாணம், டிச 11
சாதாரண கற்றலோடு இருந்து விடாது சிறப்பாக எதனையாவது நீங்கள் அனைவரும் சேர்ந்து கூட்டு முயற்சியில் மேற்கொள்ளவேண்டும் அதனால் நீங்களும் வருங்கால சமுதாயமும் பயன் பெற முடியும். தமிழ் மரபையும் சைவப் பண்பாட்டையும் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு நாம் வழங்க வேண்டியது எமது தலையாய கடமை ஆகும்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

நாவலர் சைவதமிழ்ப் பண்பாட்டு நிலையத்தால் வார இறுதி நாட்களில் நடத்தப்படும் பிரவேச, பாலபண்டிதர் வகுப்புக்களின் முதலாந்தவணை முடிவு நாளன்று இந்த வைபவம் நடைபெற்றது.

பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் வைபவத்துக்குத் தலைமைவகித்தார்.

பல்கலைப் புலவர் திரு. க சி. குலரத்தினம் பேசுகையில் கூடுதலாக உங்களிடம் தமிழ்ப்பற்றும், சைவப் பற்றும் இருக்க வேண்டும்

அந்த உந்துதலோடு தமிழையும்' சைவத்தையும் துறைபோகக்கற்றுச் சிறந்த பண்பாடுள்ளவர்களாக நீங்கள் திகழ வேண்டும் என்றார்.

பண்டிதை திருமதி புனிதவதி பாலசுந்தரம் உரையாற்றுகையில் மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டார் பாடல் தொகுத்தல், கையெழுத்துச் சஞ்சிகை வெளியிடுதல் போன்ற நற்பணிகளைத் தவணைக்கொருமுறையாவது மேற்கொள்ள வேண்டுமெனக் கூறினார்.

இரண்டாந் தவணை வகுப்புக்கள் ஜனவரி மாதம் பதினொராம் திகதி ஞாயிறன்று ஆரம்பமாகும் என நாவலர் மகா வித்தியாலய அதிபர் திரு. ப. சிவஞான சுப்பிரமணியம் தெரிவித்தார். (இ)

## ஸ்கந்தவரோதயாவில் புதிதாக ஆண்டு 6

### அடுத்தவருடம் முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 11
சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அடுத்த ஆண்டு புதிதாக 5 ஆம் வகுப்பு (ஆண்டு 6) ஆரம்பிக்கப்படும்.

கல்வி அமைச்சின் பாடசாலைச் சீரமைப்புக்கேற்பவே ஆண்டு 6 ஆரம்பிக்கப்படும்.

இப்புதிய வகுப்பில் சேர விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 22 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் அதிபருக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சை தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் இம்மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இதைவிட ஆண்டு 7க்கான பிரவேசப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

பாடங்கள் - தமிழ், கணிதம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### மாவையில் "ஆகுதி" அறிமுகவிழா

யாழ்ப்பாணம், டிச.11
ஸ்ரீ நா. சோமகாந்தனின் ஆகுதி சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா மாவைக் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதி ஸௌஜன்யா மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் 2. 30 மணிக்கு நடைபெறும்.

மாவட்டபுரம் மாவை முத்தமிழ் கலைமன்றம் ஒழுங்கு செய்த இவ் விழாவிற்கு மஹாராஜஸ்ரீ சு.து ஷண்முகநாதக் குருக்கள் தலைமைவகிப்பார்.

ஸ்ரீ வ.வயிரவப்பிள்ளை வரவேற்புரையும், கலாநிதி நா. சுப்பிரமணியன் அறிமுகவுரையும்; குறமகள், ஸ்ரீ அனு. வை நாகராஜன், செல்வி தேவகி சகஸ்ரநாமம் ஆகியோர் ஆய்வுரைகளும் நிகழ்த்துவர்.

நூலாசிரியரின் பதிலுரையும் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் நன்றியுரையும் இடம் பெறும். (இ-5)

### நீத்தார் பட்டியல்

### மேரி யோசவ்

திருவாளர் மேரி யோசவ் ஞாயிற்றுக் கிழமை காலமானார். அன்னார் வயலாவின் அன்புக் கணவரும், சகுந்தலா, கமலா, விமலா, நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராஜன், மறியோ ஆகியோரின் அன்பு மாமனும், செல்வி, கவிதா, வனிதா, நீற்ரு, றிக்காடோ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக (12-12-86) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு கரம்பன் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

கரம்பன், ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

காற்றுக்கு கற்பாறை அசையாது; அது போல தூற்றுதலுக்கும் போற்றுதலுக்கும் அறிவுள்ள மனிதன் அசையமாட்டான்.

— கௌதம புத்தர்


# உதயன்

இல.15 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 11-12-1986 த.பெ இல.23


## கல்வியும் வேலைவாய்ப்பும்

பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களுக்கு, தொழிற்கல்விப் பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பது குறித்து யாழ் கல்வித் திணைக்களம் ஆலோசித்து வருவதாக செய்தி வெளிவந்திருக்கிறது.

இதனை வெறும் ஆலோசனை மட்டத்தில் வைத்திருக்கக்கூடாது. ஒழுங்கு முறையான ஒரு திட்டமாக்கி, அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவது மிகவும் பிரதானமானதாகும்.

தமிழ் மண்ணில் இப்போது அரசியல் போராட்டம் முதல் இடத்தை வகித்து வருவது உண்மை. ஆனால் பொருளாதாரப் போராட்டமும் இப்போதே ஆரம்பிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழர்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளில் அரசியலுக்கு அடுத்த இடம் வகிப்பது வேலையில்லாத் திண்டாட்டம் என்றால் தவறாகாது.

வீட்டுக்கு வீடு ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சையில் சித்தி அடைந்துவிட்டு, பல்கலைக்கழகத்துக்கும் போக முடியாமல் ஒரு தொழில் வாய்ப்பையும் தேடிக் கொள்ளாமல் அவதிப்படும் இளைஞர், யுவதிகளையே காண முடிகிறது.

அவர்களால் பெற்றோர் படும் சிரமமும் துன்பமும் சொல்லில் வடிக்க முடியாதவை. எத்தனை ரூபா உழைத்தாலும் 'கட்டுபடியாக வில்லை' என்று சொல்லும் பெற்றோர்களே 90 சத விதமானோர்.

"பாடசாலைக்கு என்றும், ரியூட்டரிக்கு என்றும் செலவு செய்து படிப்பித்தும் இன்னமும் இவர்களுக்கு நானே சோறு போட வேண்டி உள்ளது" என்று வதங்கித் தவிக்கும் நடுத்தர குடும்பத் தலைவர்களே 90 சத வீதத்தினர்.

அரச சேவையாளர்கள், ஆசிரியர்கள், தனியார் ஊழியர்கள் நிலை அதுவானால், சாதாரண விவசாயியையும், தொழிலாளியையும் அவர்களது வாழ்க்கைக் கஷ்டங்களையும் எழுதித் தான் முடியுமா?

எமது மக்களில் விவசாயி, தொழிலாளி நடுத்தர வகுப்பினரே 95 சத வீதத்தினர் என்று சொல்லலாம். அவர்களின் பிள்ளைகள் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர் வீட்டில் 'சும்மா' இருந்தால் எமது பொருளாதாரம் என்னாவது?

எமது கல்வி முறை இன்னமும் தொழில் முறை சாராத ஏட்டுக் கல்வியாக இருப்பதே இதற்குக் காரணமாகும் ஜீ. சி. ஈ. சாதாரண தர வகுப்பிலாவது அல்லது அதிலிருந்தாவது தொழில்முறை சார்ந்த கல்வி புகட்டப்பட்டால் மாணவர்கள் ஏதாவது ஒரு தொழிலைப் பழகிவிடுவார்கள்.

இப்போதைய நிலை அதுவல்ல. உயர் தரத்தில் நான்கு பாடங்கள் சித்தி அடைந்திருப்பார் ஒருவர். இரண்டு திறமைச் சித்திகளும் இரண்டு சாதாரண சித்திகளும் பெற்றிருப்பார். ஏதாவது தொழில் தெரியுமா என்று கேட்டால் கையை விரிப்பார். ஆகக் குறைந்தது சுருக்கெழுத்து, தட்டெழுத்தாவது தெரியுமா என்று கேட்டால் இல்லை என்றே தலையை ஆட்டுவார்.

ஆனால் ஒரு துறையில் பத்துப் பதினைந்து வருடங்கள் அனுபவம் பெற்றவரின் சம்பளத்தை எதிர்பார்ப்பார் ஆரம்பத்தில் வேலையைப் பழகவாவது விரும்புவாரா என்றால், இல்லை! அதைவிட வீட்டில் பெற்றோருக்குப் பாரமாக இருக்கவே விரும்புவார்.

ஏதோ ஒரு தொழில் நுட்ப வேலையை (உதாரணமாக வாகனங்கள் திருத்துதல், ஒட்டுவேலை அல்லது மின்சார வேலை) பழக விருப்பமோ என்று வினவினால் அவை தனது கல்வித் தகைமைக்குக் குறைந்ததாக மதிப்பிடுவார்.

பாடசாலையால் புறப்பட்டதும், நிறையச் சம்பளம் கிடைக்கும் ஒரு வேலையையே தேடுகிறார். அப்போதுதான் "டீங்காராக" வாழ முடியும் என்று எண்ணுகிறார். ஆனால் அதே பேர்வழி பெற்றோரை பல்லாயிரம் ரூபாவுக்குக் கடனாளி ஆக்கி வெளிநாடு போய் கூலி வேலை செய்யத் தயங்குவதில்லை.

இந்நிலையில் —

எமக்கு முதலில் அவசியம் தொழில் முறைசார்ந்த கல்வி. எந்தத் தொழிலையும் கஷ்டப்பட்டுப் பயிலவேண்டும் என்ற மனப் பக்குவத்தை இளைஞர், யுவதிகளிடம் வளர்ப்பது இரண்டாவது தேவை.

இத்தகைய சூழ்நிலையில்—

பாடசாலை விட்டு விலகும் மாணவருக்குத் தொழிற் கல்வி பயிற்றுவிக்கும் திட்டம் ஒவ்வொரு இளைஞருக்கும் ஒரு தொழிலை பயிற்றுவிப்பதாக இருக்கவேண்டும். வெறும் திட்டமாக அன்றி நடைமுறைச் சாதகமானதாக இருப்பதிலேயே அதன் வெற்றி தங்கி உள்ளது.

# பீகிங்கில் மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## கூடுதல் ஜனநாயகம் வேண்டும் என்று கோஷம்

பீகிங், டிச. 10

கூடுதல் ஜனநாயகம் வேண்டும் என்று கோரி பீகிங்கில் உயர் கல்வி மாணவர்கள் கடந்த ஒருவார காலமாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தி வருகின்றனர்.

இப்படியான ஊர்வலங்கள் சீனாவைப்பொறுத்தமட்டில் அசாதாரணமானவை.

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இவ்வீதிஊர்வலங்களில் பங்குபற்றி வருவதாக பி. பி. சி. வானொலி பீகிங் செய்தியாளர் அறிவித்தார்.

பீகிங்கின் கிழக்குப்பகுதியில்ஊர்வலங்கள் பரவலாக இடம்பெற்றன.

ஐந்து பல்கலைக் கழகங்களின் மாணவர்கள் இவற்றை நடத்தினர்

சீனாவின் தேர்தல் சட்டங்கள், அரசமைப்புச் சட்டம் ஆகியவற்றைப் பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்றும் மாணவர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாகாண அரசுப் பிரதிநிதிகளிடம் கோரிக்கைகளை மாணவர்கள் கையளித்தனர். (இ-எ)

## ஒத்திவைப்பு

இஸ்லாமாபாத், டிச.10

எல்லைப் பாதுகாப்பு, சீக்கியத் தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டஇந்திய — பாகிஸ்தான் பேச்சுக்கள் இம்மாத பிற்பகுதிக்கு ஒத்திப்போடப்பட்டன.

டிசம்பர் 19–20 திகதிகளில் பேச்சுக்கள் லாகூரில் மீண்டும் ஆரம்பமாகும். (இ-எ)

### வெளி உலகில்

## ஊடுருவலைத் தடுக்க இந்திய - பங்களாதேஷ் தளபதிகள் இணக்கம்

டாக்கா, டிச. 10

இருதரப்பு எல்லைகளூடாக தீவிரவாதிகள் நுழைவதைத் தடுப்பது என்று இந்திய — பங்களாதேஷ் இராணுவத் தளபதிகள் தீர்மானித்துள்ளனர்.

இந்திய மாநிலமான மிஸோரத்தின் தெமகிரி தலைநகரில் இத்தளபதிகள் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

தீவிரவாதிகளுக்கு புகலிடம் கொடுப்பதுஇல்லை என்றும் இராணுவத்தளபதிகள் தீர்மானித்தனர். (இ-எ)

## ஜனநாயக கிண்டல் பொப் இசை

பாங்கொக், டிச.10

ஜனநாயகத்தைக் கிண்டல் பண்ணுவது போல் அமைந்த பொப்பாடல் ஒன்றை தாய்லாந்து அரசு தடை செய்துள்ளது.

ஜனநாயகத்தைக் கேலி செய்வதன் மூலம் நாட்டை பிளவுபடுத்தும் நோக்கில் இப்பாடல் அமைந்திருப்பதாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சபை அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

# பிலிப்பீன்ஸில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தது

மணிலா, டிச. 10

பிலிப்பீன்ஸ் அரசுக்கும் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான யுத்த நிறுத்தம் இன்றில் இருந்து நடைமுறைக்கு வந்தது

கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களை வைத்திருக்கும் விஷயம் குறித்து தெளிவான நிலையை விவரிக்கும் அறிக்கை ஒன்றை ஜனாதிபதி கொரோசன் அக்கியூனோ விடுக்கவேண்டும் என்று கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரர்கள் கேட்டுக்கொண்டனர்.

இதனிடையில் யுத்த நிறுத்தப் பேச்சுக்களை கிளர்ச்சிக்காரர்களுடன் நடத்திய அரசுத் தூதர் சொன்னதாவது;

கிளர்ச்சிக்காரர்கள் மக்கள் வாழும் பிரதேசங்களுக்குள் நுழையும் போது ஆயுதங்களை முகாம்களில் வைத்துவிட்டு வரவேண்டும்.

கிளர்ச்சிக்காரர்களும் அரச படையினரும் நேருக்கு நேர் சந்திக்கும் போது தாக்குதலில் ஈடுபடமாட்டார்கள்.

இந்த நிபந்தனைகளுடன் தான் யுத்த நிறுத்த உடன்பாடு காணப்பட்டது.

இப்படி அரசுப் பிரதிநிதி தெரிவித்தார். (இ-எ)

## லெபனான் யுத்தநிறுத்த முயற்சி தோல்வி

டுனிஸ், டிச. 10

லெபனானில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவர அரபுலீக்கின் ஒத்துழைப்பைப் பெற பலஸ்தீன விடுதலை இயக்கம் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

டுனிஸில் அரபுலீக் மாநாடு நடந்தது. 21 உறுப்பு நாடுகள் அதில் கலந்துகொண்டது.

இரண்டு முஸ்லிம் பிரிவுகளுக்கு இடையேயான மோதலை நிறுத்தி யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றைக் கொண்டு வரவே, பலஸ்தீன விடுதலை இயக்கம் அரபுலீக்கின் ஒத்துழைப்பை நாடியது. (இ-எ)

## பாதுகாப்புச் சபையை கூட்டக் கேட்கிறது நிக்கரகுவா அரசு

வாஷிங்டன், டிசம்பர் 10

நிக்கரகுவா மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து ஆராய ஐ நா. பாதுகாப்புச் சபையின் விசேட கூட்டம் ஒன்றை நடத்துக.

இப்படி நிக்கரகுவா, பாதுகாப்புச் சபையைக் கோரியுள்ளது.

பாதுகாப்புச்சபையின் தற்போதைய தலைவராக இருப்பவர் ஐ. நா.வில் உள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு வெர்ணன் வால்டர்ஸ்.

திரு வால்டர்ஸைச் சந்தித்து நிக்கரகுவா தூதர் செல்வி நோரா அஸ்ரேகா இக்கோரிக்கையைச் சமர்ப்பித்தார்

"நிக்கரகுவா துருப்புக்கள் இரண்டாயிரம் வரையில் ஹொண்டுராஸுக்குள் நுழைந்தன என்று கூறப்படுவது தவறு

"ஆனால் ஹொண்டுராஸ் விமானங்கள் நிக்கரகுவா பிரதேசத்தில் குண்டு வீச்சு நடத்தின.

'இப்பிராந்தியத்தில் பதற்ற நிலைமை நிலவுகிறது.

இப்படி நிக்கரகுவா தூதர் செல்வி நோரா அஸ்ரேகா செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ)

## மாணவருக்கு மித்தரண்ட் பாராட்டு

பாரீஸ், டிச. 10

பல்கலைக்கழக சீர்திருத்தச் சட்டமூலத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்திய முறை குறித்து மாணவர்களை பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்ட் பாராட்டினார்.

அதே நேரம் சட்டமூலம் சம்பந்தமாக அரசாங்கம் கையாண்ட முறைகளை ஜனாதிபதி கண்டித்தார்.

வானொலிப் பேச்சு ஒன்றின்போது ஜனாதிபதி பாராட்டையும் கண்டனத்தையும் தெரிவித்தார். (இ-எ)

# பெங்களூர் பேச்சுக்களுக்கு தம்பிமார் எப்படி அழைத்துச் செல்லப்பட்டனர்?

பெங்களூர் சார்க் மாநாட்டின்போது இந்திய அரசுக் குழுவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவருக்கும் இடையேயான பேச்சுக்களின் விவரங்கள்—

பெங்களூர் விமான நிலையத்தில் வைத்து கடைசியாக நடந்த ஜெயவர்த்தனா-காந்தி பேச்சுக்களின் விவரங்கள்— 'புரொன்ட்லைன்' இந்திய சஞ்சிகையில் (நவ 29 டிச 12) வெளிவந்தன

அவை இங்கு பிரசுரமாகியுள்ளன.

நவம்பர் 16. இரவு 8.45 மணி இருக்கும்— தமிழீழ விடுதலைப் புலிகள் அலுவலகத்தில், தலைவர் வே. பிரபாகரன் இருக்கிறார்.

தமிழ் நாடு பொலீஸின் 'கியூ' கிளையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் அலுவலகம் செல்கிறார்.

பிரபாகரன், பாலசிங்கம், திலகர்— ஆகிய மூவரையும் இப்பொழுதே பெங்களூர்ப் போக தயாராகும்படி அந்த அதிகாரி கூறுகின்றார்.

மாற்று உடுப்பு எடுக்க வேண்டும் என்ற பிரபாகரனின் கோரிக்கை, கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருக்கின்றேன் என்ற பாலசிங்கத்தின் விண்ணப்பம் ஆகியன அந்த பொலீஸ் அதிகாரிக்கு ஏறவில்லை.

இந்திய விமானப் படையின் விசேட விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு (பிரபாகரனுக்குரிய மாற்று உடுப்புடன்) பெங்களூர் கொண்டு போகப்பட்டனர்.

### நள்ளிரவில்

பெங்களூரில் நள்ளிரவு 12 மணிக்கு தீவிரக் கலந்துரையாடல் தொடங்கியது. இங்கள் அதிகாலை 8 மணி வரை இது நீடி[illegible]

[illegible]தது.

வடக்கு, கிழக்குத் தமிழர் பகுதிகள் ஒரே தொடராக இருப்பது பற்றியே இந்த ஆலோசனை நடத்தப்பட்டது.

இதில் இணை அமைச்சர்கள் நட்வர்சிங், ப. சிதம்பரம், இந்தியத் தூதர் டிக்ஸிற், முதலமைச்சர் இராமச்சந்திரன், அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதிகாரப் பகிர்வு எந்த மட்டத்தில் இடம் பெறவேண்டும் என்பதில் புலிகள் குழு உறுதியாக இருந்தது. தமிழர் தாயகம் பற்றிய வியாக்கியானத்தை புலிகள் குழு சுட்டிக் காட்டியது.

மட்டக்களப்பு, திருமலைப் பகுதிகளில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களை வடக்குடன் இணைக்கும் இலங்கை அரசின் யோசனை போதுமானதாக இல்லை. வடக்கு-கிழக்கு பூரணமாக இணைந்த தமிழ்மொழிப் பிரதேச அமைப்பே எமக்குத் தேவை — இப்படி பிரபாகரன் வலியுறுத்தினார்.

திம்பு மாநாட்டில் கூட தாயகக் கோட்பாட்டில் விட்டுக் கொடுக்கவில்லை என்பதை புலிகள் குழு இந்திய அரசுப் பிரதிநிதிகளுக்கு நினைவூட்டியது.

தமிழர் பகுதிகள் தொடராக இல்லை என்பதை ஜெயவர்த்தனா வலியுறுத்தக்கூடும். கிழக்குமாகாணத்தில் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றங்கள் சட்ட விரோதமானவை — இப்படி புலிகள் குழு தெரிவித்தது.

மகாவலித் திட்டம்கூட திருமலையில் சிங்களவர்களைக் குடியமர்த்தவே அமுல் நடத்தப்படுகிறது.

புள்ளி விவரங்கள், வரைபடங்கள் சகிதம் [illegible] அரசுப் பிரதிநிதிகளுக்கு [illegible] எடுத்துக் காட்டியது.

கிழக்கு மாகாணத்தில் 1946இல் சிங்களவர் சனத்தொகை 8.4வீதமே இருந்தது. தமிழர் 52.3 வீதமும், முஸ்லிம் 29.1 வீதமும் இருந்தனர்.

### கிழக்கில் சிங்களக் குடியேற்றம்

1981இல் சிங்களவர் எண்ணிக்கை 24.9 வீதமாக அதிகரித்தது. தமிழர், முஸ்லிம் சனத்தொகை முறையே 41.9, 32.2 வீதமாகக் குறைந்தது.

இக்காலகட்டத்தில் திருமலை மாவட்டத்தில் சிங்களவர் சனத்தொகை இரண்டு (33.6வீதம்) மடங்காகியது. தமிழர் எண்ணிக்கை 36.4 வீதமாகவும் முஸ்லிம் 29 வீதமாகவும் வீழ்ச்சி அடைந்ததாக இந்திய அரசுப் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கையும் கிழக்கையும் இரண்டாக வைத்திருக்கும் கொழும்பு அரசின்யோசனை, திருகோணமலை, தமிழர் கைகளுக்குப்போவதைத் தடுப்பதையே இலக்காகக் கொண்டு உள்ளது.

இப்படி விடுதலைப் புலிகள் இந்திய அரசுப்பிரதிநிதிகளுடன் வாதிட்டனர்.

நவம்பர் 17ஆம் திகதி காலை 11 மணிக்கு பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகின.

இதில் இணை அமைச்சர் சிதம்பரம் கலந்து கொள்ளவில்லை. இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ பி. வெங்கடேஸ்வரன் கலந்துகொண்டார்

'இலங்கையின் யோசனைகள் திட்டவட்டமானவை அல்ல; ஓர் ஆலோசனையே. இந்த நிலைப்பாட்டை ஏற்று கொழும்புடன் பேச்சுக்கள் நடத்தி கூடப்பெற முயற்சியுங்கள்'– இப்படி இந்திய அதிகாரிகள் புலிகளிடம் தெரிவித்தனர்.

எப்படியிருந்தும் இலங்கை அரசின் யோசனைகள் மேற்கொண்டு பேச்சுக்கள் நடத்தப் போதுமானவை அல்ல என்று புலிகள் தெரிவித்தனர்.

தாயகக் கோட்பாட்டைக் கொழும்பு ஏற்றால்தான் பேச்சுக்களில் பங்குபற்றுவது பற்றி ஆலோசிக்கலாம் — இது புலிகள் தரப்பின் பதில்.

'இதுமுன் நிபந்தனை அல்ல; தமிழரின் அடிப்படை நிலையே இது தான்' — புலிகள் நிலைப்பாடுஇது.

ஒப்பிடக் கூடிய இப்பிரச்சினைகளில் ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனாவும் எடுத்துக் கொண்ட முரண்பட்ட நிலைகளைப் போராளிகள் சுட்டிக் காட்டினர்.

### மிஸோரம்

மிஸோரம் பிரச்சினையில் திரு. காந்தி மிஸோ தேசிய முன்னணிக்குக் காட்டிய தாராளமனப்பான்மையை புலிகள் நினைவுபடுத்தினர்.

"ஆனால் ஜெயவர்த்தனாவிடமிருந்து ஏமாற்றங்களும் துரோகங்களுமே இதுவரை காலமும் கிடைத்து வந்தன."

இப்படிப் புலிகள் சொன்னார்கள்.

இணக்கம் ஏதும் இன்றி பிற்பகல் 2 மணியளவில் பேச்சுக்கள் முடிவடைந்தன.

'தமிழர் தாயகம்' பற்றித்தான் பேச்சுக்கள் இருந்தன. வேறு விஷயங்கள் விவாதிக்கப்படவில்லை.

பிரபா, பாலசிங்கம், திலகர் ஆகியோர் பின்னர் முதலமைச்சர் இராமச்சந்திரனைச் சந்தித்தனர்.

'தமிழர் தாயகம்' பற்றிய தங்கள் நிலைப்பாட்டை முதலமைச்சரிடம் புலிகள் எடுத்துச் சொன்னார்கள்.

தங்களுடைய நிலைப்பாட்டில் உள்ள நியாயத்தை முதலமைச்சர் உணர்ந்து கொண்டார் என்று புலிகள் கூறினர்.

மூன்று தரம் பெங்களூரில் ஜெயவர்த்தனாவுடன் பேச்சுக்கள் நடத்திய பிரதமர் காந்தி, விமான நிலையத்தில் வைத்து மட்டும் மூன்று மணித்தியாலம் மரதன் பேச்சுக்களை ஜெயவர்த்தனாவுடன் நடத்தினார்.

இந்த மரதன் பேச்சில் இடம் பெற்ற விஷயம் என்ன? அது ரகசியமாக இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட அரச சிங்களக் குடியேற்றத் திட்டம் பற்றித்தான் மரதன் பேச்சுக்களின் போது ஜெயவர்த்தனாவிடம் ராஜீவ் காந்தி கூறியிருப்பார்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் நம்புகின்றனர். (இ-எ)

## ஆவரங்கால்-வல்லை வீதி திருத்தப்படுகிறது

அச்சுவேலி, டிச. 11

ஆவரங்கால் - வல்லை பிரதானவீதி திருத்தி அமைக்கப்படுகிறது. நீண்டகாலமாகப் பழுதடைந்திருந்த இந்த வீதியைத் திருத்தி அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

### பொய்யாமொழி

குறள்:

உயிர் உடம்பின் நீக்கியார் என்ப
செயிர் உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

பொருள்:

நோய் மிகுந்த உடம்புடன் வறுமையான தீய வாழ்க்கையுடையவர், முன்பு கொலை பல செய்து உயிர்களை உடம்புகளில் இருந்து நீக்கியவர் என்று அறிஞர் கூறுவர்.



### சமய நந்திகளில்

## திருவாசக முற்றோதல்

கொடிகாமம், டிச.11

இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டி தென்மராட்சி சைவமகா சபை நடத்திவரும் திருவாசகம் முற்றோதல் சரசாலை இலந்தைத்திடல் வீரமாகாளி அம்மன் கோயிலில் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இது இச்சபை நடத்தும் 26 ஆவது மாத முற்றோதலாகும். (இ-75)

## ஈழத்து சிதம்பரத்தில்

வட்டுக்கோட்டை, டிச. 11

கடந்த 36ஆண்டுகளாக ஈழத்துச் சிவன்கோவிலில் நடைபெற்றுவரும் மணிவாசகர் விழா இம்முறை எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 16ம்ஆம்திகதிசெவ்வாய்க்கிழமைவரை மூன்றுநாட்களுக்கு நடைபெறும்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தலைமை வகித்து ஆசிவழங்கி மணிவாசகர் விழாவை ஆரம்பித்து வைப்பார். (இ161)

## சாவகச்சேரியில் சுகாதார விழா

சாவகச்சேரி, டிச. 11

தென்மராட்சிப் பகுதி ஆரம்ப சுகாதார சேவிப்பு நிலையங்கள் ஒன்றிணைந்து சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் சுகாதார விழா நடத்தின.

செல்வி சபாரத்தினம் தலைமையில் ஆரம்பமான விழாவில் டாக்டர் திரு. த. சிங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வைத்திய அதிகாரி டாக்டர் ரி. சோமசுந்தரம், டாக்டர் திரு. எஸ் கருணானந்தம், சுகாதார வைத்திய அதிகாரி திரு. கே. நடராசா, டாக்டர் பே. பிலிப் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். (இ - 31)

## உணவில் தன்னிறைவு காண்பது அவசியம்

### மரம் நடும் விழாவில் உரை

சுன்னாகம், டிச. 11

தமிழ்ப் பிரதேசங்கள் எதில் தன்னிறைவு காணவிட்டாலும் உணவில் தன்னிறைவு காண்பது அவசியம். அப்போதுதான் எமது மண் காக்கும் போராட்டங்கள் மக்களால் போற்றப்படும்.

ஊரெழு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களின் மரம் நடும் விழாவில் சிறப்புரையாற்றுகையில் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. சிவமகா

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

I.C.M.A.
* Stage I, II & III
Contact:
Rapid Results
Institute
212, KACHCHERI-NALLUR ROAD,
JAFFNA.

# உதயன்

11 - 12 - 1986 வியாழக்கிழமை

A.A.T.
* All Stages
Contact:
Rapid Results
Institute
212, KACHCHERI-NALLUR ROAD,
JAFFNA.

# மனித உரிமை வென்றெடுக்க ஒன்றுபட்டுப் போராடுவோம்

## வெகுஜன இயக்கப் பிரதிநிதி உரை

யாழ்ப்பாணம், டிச 11

எமது மனித உரிமைகளை நாம் வென்றெடுப்பதற்காக ஒன்றுபட்டுப் போராடுவோம்; போராட ஒன்றுபடுவோம். எதிரிக்கெதிராக மிகக் குறைந்த அளவில் ஐக்கியமாவது எம்மிடையே காண முடியாவிட்டால் நாம் போராடத் தகுதியற்றவர்கள்.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்க பிரதிநிதி திரு. எஸ் திவ்வியராஜா இவ்வாறு கூறினார்.

மனித உரிமைகள் தினமான நேற்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில்;

தனது சகாவுக்கு உரிமை தராதவன் மனித உரிமைக்காக போராடும் போராளி என தன்னைச் சொல்லிக் கொள்வது வெறும் பம்மாத்து.

காலிமுகத்திடலில் எமது மனித உரிமைக்காக சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது குண்டர்கள் குழப்பினார்கள்.

அதேபோல் அண்மையில் நடந்த பாதயாத்திரையை இங்கே சில குண்டர்கள் குழப்பினார்கள். எமது மனித உரிமைகளுக்கான போராட்டம் எங்கே செல்கிறது?

தனது மனைவிக்குத் தனது சொந்தக் கருத்தைக் கூறமுடியாத நிலையில் சுதந்திரமின்றி இன்று ஒவ்வொரு தமிழ் மகனும் உள்ளான். எங்கே எமது போராட்டம் செல்கிறது?

இப்படி அவர் கேட்டார்.

கிராமியத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதி கிருஷ்ணபிள்ளை பேசுகையில்; பொருளாதார, சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட கிராம தொழிலாளர்கள், நிலமின்றி, கல்வியின்றி, மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் போராடுகிறார்கள்.

இவர்களை ஒடுக்குபவர்களே இவர்களுக்காகப் போராடுவதாக கூறிக் கொள்கிறார்கள்.

பன்னாலை, மருதடி, பொன்னாலை, அச்சுவேலி போன்றவை ஆகிய இடங்களில் நிலப் பிரபுக்களின் அட்டூழியங்கள் இப்போதும் நடந்து வருகின்றன.

போராளிகளே கிராம மக்களிடம் செல்லுங்கள். அவர்களிடம் போராட்டத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்.

ஏ.கே.47 தூக்கவில்லை

இன்று மலையக மக்கள் தமது மனித உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்டு விட்டனர். அவர்கள் ஏ. கே 47 தூக்கவில்லை. தமது தொழில் ஆயுதங்கள் மூலமே தமது உரிமைகளை வென்றெடுக்க போராட புறப்பட்டனர் — என்றார்.

இந் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த ஈ. பி. ஆர் எல். எப். பிரதிநிதி ஈசன் பேசுகையில்;

சி. ஐ. ஏ, மொசாட் எமது போராளிகளைக் கையாளும் வகையிலான அராஜக மனித உரிமை மீறல்கள் இங்கே நடக்கின்றன எனவே நாம் போராட்டத்துக்குள் போராட வேண்டியவர்களாக உள்ளோம்; என்றார்.

பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி விமலேஸ்வரன், ஈழப் பெண்கள் விடுதலை முன்னணிப் பிரமுகர் அஞ்சலி, பல்கலைக்கழக கலாசார குழுப் பிரதிநிதி ஞானசேகரம்; மாணவர் ஐக்கிய முன்னணிப் பிரமுகர்; திரு. வி. ஏ, கந்தசாமி ஆகியோரும் உரையாற்றினர்.

நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் மனித உரிமைகளுக்காக வெளியேயும், இயக்கங்களின் உள்ளேயும் போராடி உயிர் நீத்த தியாகிகளுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-5)

## 4 ஆயிரத்துக்கு 40,000 பேர் விண்ணப்பம்

கொழும்பு, டிச.11

4,000 ஆசிரியர் பதவிகளுக்கு 40,000 பேர் விண்ணப்பித்திருக்கின்றனர்

கல்விச் சேவைக் குழு வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

கடந்த ஐந்தாம் திகதியுடன் விண்ணப்பங்கள் அனுப்பும் கடைசித்திகதி முடிவடைந்தது

இருந்தும் விண்ணப்பங்கள் இன்னும் வந்து கொண்டிருப்பதாகவும் விண்ணப்பிப்போர் எண்ணிக்கை 50,000 த்தைத் தாண்டிவிடும் என்றும் கூறப்படுகிறது. (இ-எ)

## ஒரு மொழிவாரி மாநிலத்தில்

# தமிழர்களுக்கு வடக்கு முஸ்லிம்களுக்கு கிழக்கு

## ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் கூறுகிறது

யாழ்ப்பாணம், டிச 11

தமிழ் மக்களுக்காக ஒரு புதிய வடமாகாணமும் முஸ்லிம் மக்களுக்காக ஒரு புதிய கிழக்கு மாகாணமும் உருவாக்கப்பட வேண்டும்.

இரண்டு மாகாணங்களும் ஒரு மொழிவாரி மாநிலத்தினுள் அமையலாம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் கவிஞர் மருதூர்க்கனி உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

கவிஞர் மருதூர்க்கனி மேலும் சொன்னதாவது

எந்தவகையான சுயாட்சியிலும் சரி முஸ்லிம்களின் தனித்துவம் எவ்வாறு வரையறுக்கப்படும் என்பதுபற்றி திவிரவாத, மிதவாதக் குழுக்களினால் இன்னும் தெளிவாக முன் வைக்கப்படவில்லை.

கிழக்கில் மூன்று மாகாணசபைகள் என்ற அரசின் திட்டத்திலும் முஸ்லிம்களைப் பற்றிய நிலை தெளிவாகக் கூறப்படவில்லை

எவ்வாறெனினும் கிழக்கு முஸ்லிம்களின் பலத்தை மேலும் மூன்றாகப் பிரித்து முஸ்லிம்கள் செல்லாக்காசுகளாக ஆக்கப்படுவதை எந்த முஸ்லிமும் விரும்பப்போவது இல்லை.

இந்தக்காலகட்டத்தில் தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக மாறியுள்ளது. இது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நியதி.

இப்படி கவிஞர் மருதூர்க்கனி தெரிவித்தார் (இ-எ)

## மாணவர் கைது விடு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கழக மாணவர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையிலும் அமைந்திருந்ததால் இவர்களைக் கைதுசெய்ய நேர்ந்தது.

இத் துண்டுப்பிரசுரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினரான ''ஜெகன்'' என்பவர் மூலம் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது இவ்விரு நபர்களில் ஒருவர் 'சோல்ற்' எனப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் உறுப்பினர் ஆவர் மற்றையவர் புலிகளின் குரல் செய்திப்பலகைஎழுதும் புலிகளின் ஆதரவாளர்.

விசாரணையில் எமக்கு கிடைத்த தகவலிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளோடு நாம் தொடர்பு கொண்டு கேட்டதற்கு இவ் விருநபர்களுக்கு தாம் பொறுப்பில்லை எனவும்பெற்றோருடன்பேசிக் கொள்ளுமாறும் கூறினர்

இவர்களை விடுவிப்பது தொடர்பாக நேற்றுக் காலையில் எம்முடன் தொடர்பு கொண்ட உறவினர்களுக்கு மாலையில் விடுவதாக உறுதியளித்திருந்தோம்.

தவறான வழியில் வழிநடத்தப்பட்ட அவ்விருவரையும் எச்சரிக்கை செய்து அவர்களின் உறவினர்களிடம் புதன் இரவு நாம் ஒப்படைத்துள்ளோம்.

எமது எந்தவித நடவடிக்கைகளையிட்டும் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு வேறுவகையான கருத்துக்கள் இருப்பின் அதனை நேர்மையாக மக்கள்முன் வைக்குமாறு தோழமையுடன் வேண்டிக் கொள்கிறோம். ஆரோக்கியமான விமர்சனங்கள் வளர்ச்சிக்கு வழிகோலுமென்பதில் எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. இச்சம்பவத்தினூடாகவே அத்தகைய அணுகுமுறையைக் கடைப் பிடிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். விமர்சனம் செய்வதற்கும் புலிகள் கெரில்லாப்பாணி முறையை கையாள்வது நாகரிகமானதல்ல.

சகவிடுதலை ஸ்தாபனங்களோ, பொதுமக்களோ தனிநபர்களோ எமது நடவடிக்கைகள் பற்றிய தங்கள் கருத்துக்களை ஒளிவு, மறைவின்றி நேர்மையாக முன் வைக்க என்றும் நாம் தடையாக இருந்ததில்லை.

## பாக் மந்திரி மாஸ்கோ பயணம்

இஸ்லாமாபாத், டிச. 10

மூன்று நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல் சத்தார் மாஸ்கோ சென்றிருக்கிறார்.

ஆப்கன் பற்றிய பிரச்சினை குறித்தே ரஷ்ய அதிகாரிகள் பாகிஸ்தான் அமைச்சருடன் பேச்சுக்கள் நடத்துவர் என்று தெரிகிறது (இ-எ)

## மின்மாற்றி வலுவுள்ளதாக மாற்றப்பட்டது

அச்சுவேலி, டிச.11

அச்சுவேலிச் சந்தையில் உள்ள உபமின்சார நிலையத்தின் மின்மாற்றி மேலும் வலுவுள்ளதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தின் மின்சார விநியோகத்தில் பெரும்பகுதி இந்த மின்மாற்றிமூலம் வழங்கப்படுவதால் இது பழுதடைந்து வந்தது.

இதனால் பாவனையில் இந்த மின்மாற்றியை அகற்றி மேலதிக வலுவுள்ள புதிய மின்மாற்றியை இலங்கை மின்சார சபை அமைத்துக் கொடுத்துள்ளது (இ-11)

## ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், டிச 11

இலங்கை வங்கி கச்சேரிக் கிளையில் ஒய்வூதியம் பெற்று வந்தவர்க்குரிய டிசம்பர் மாதத்திற்கான ஒய்வூதியம் எதிர்வரும் 13ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் கோட்டைக் கொடுப்பனவுக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும்.

13ஆம் திகதி சனிக்கிழமை ஆசிரியர் ஒய்வூதியமும்.

16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விதவைகள் ஒய்வூதியமும்.

17ஆம் திகதி புதன் கிழமை ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்களின் ஒய்வூதியமும் வழங்கப்படும்.

இக் கொடுப்பனவுகள் காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 1 மணி வரை வழங்கப்படும். (இ-10)

# தமிழர்கள் சுதந்திரமாக வாழ சுயநிர்ணய உரிமை தேவை

## வை. எம். சி. ஏ. கூட்டத்தில் திரு. நேசையா

யாழ்ப்பாணம், டிச.11

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமானால் அரசு அவர்களது சுயநிர்ணய உரிமைகளை வழங்கவேண்டும்.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்று யாழ் வை. எம். சி. ஏ. கட்டடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேராசிரியர் கு. நேசையா இவ்வாறு தெரிவித்தார். கூட்டம் திருமதி கு. பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்றது

கூட்டத்தின் ஆரம்பத்தில் கடந்த காலங்களில் மனித உரிமைகளுக்காக போராடி களத்தில் பலியான போராளிகளுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பேராசிரியர் நேசையா மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது மக்களுக்கு பூரண சுதந்திரம் கிடைக்க வேண்டுமானால் தமிழ்மக்கள் தமக்குள் சிலருக்கு மறுக்கப்படும் மனித உரிமைகளை வழங்குவது அவசியம்.

தமிழ் மக்களிடையே உள்ள சாதி வேற்றுமைகள் களைந்தெறியப்பட வேண்டும், பல்கலைக்கழகங்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும். பொது அறிவை வளர்க்கக்கூடிய நூலகங்கள் பரவலாக நிறுவப்பட வேண்டும் — என்றார்,

திருமதி பரராசசிங்கம் தமது தலைமை உரையில் கூறியதாவது:-

எமது மக்கள் எமது உரிமைகளையே மறுக்கிறார்கள்

ஆயுதம் தாங்கிய போராளிகள் மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக எவ்வளவு கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிக்கிறார்கள் என்பதை உணர்வதில்லை. எத்தனை இடையூறுகளின் மத்தியில் போராடுகிறார்கள் என்பதை சிந்திப்பதில்லை.

சில மக்கள் சுய நிர்ணய உரிமையே வேண்டாம் எம்மை வாழவிட்டால் போதும் என்ற கருத்தையும் கூறி வருகிறார்கள் அதனையே விரும்பவும் செய்கிறார்கள்.

இந்த நிலை மாற வேண்டும். தற்காலிகக் கஷ்டங்களுக்காக எமது உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்க முடியாது என் என்றார்.

திரு. நா. மயில்வாகனமும் கூட்டத்தில் உறையாற்றினர். (இ-10)

## மனித உரிமையை பாதுகாக்க கோரிக்கை

வாஷிங்டன், டிச. 10

மனித உரிமைகளைப் பாதுகாக்க உலக நாடுகள் முன்வர வேண்டும்.

இப்படி ஐ நா பொதுச் செயலாளர் பெரோஸ் டி குயிலர் தனது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படுவதை ஒட்டி பொதுச் செயலாளர் இவ்வேண்டுகோளை விடுத்தார். (இ-எ)

## சிறந்த---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மர் பிரேமதாச சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை நேற்று ஏற்றுக்கொண்டது.

இதற்கான நிதியாக 3 இலட்சம் ரூபா ஜனாதிபதி நிதியில் இருந்து ஒதுக்கப்படும்.

பிரதமரின் செயலாளர் தலைமையிலான கமிட்டி ஒன்றே சிறந்த பத்திரிகையாளரைத் தெரிவுசெய்யும். (இ-எ)

## அமிர்தராஜுக்கு அர்ஜுனா விருது

புதுடில்லி, டிச. 10

பிரபல விளையாட்டு வீரர் ஆனந்த் அமிர்தராஜுக்கு 'அர்ஜுனா' விருது வழங்கப்பட்டது

இந்திய அரசு விளையாட்டுத்துறையில் பிரபலம்பெற்ற 19 பேருக்கு இவ் விருதை இன்று வழங்கியது இவர்களில் அறுவர் பெண்கள்.

ராஷ்டிரபதி பவனில் நடந்த வைபவம் ஒன்றில் ஜனாதிபதி ஷெயில் சிங் இவ் விருதுகளை வழங்கினார்.

ஆனந்த் அமிர்தராஜ் வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை. அவரின் பிரதிநிதி விருதைப் பெற்றுக் கொண்டார். (-எ)


## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 11

வெகுஜன அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு இணங்க கோப்பாயில் இன்று காலை வியாழக்கிழமை நடைபெற இருந்த கண்டனப் பொதுக் கூட்டம் வேறொரு தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை நடந்த கோப்பாய்ப்பகுதி வெகுஜன அமைப்புக்களின் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. (இ-எ)

நீத்தார் பட்டியல்



தோற்றம்: 07-12-1933 மறைவு: 10-12-1986

வல்லிபுரம் பொன்னுத்துரை J.P.
(சந்நிதி முருகன் லொறி உரிமையாளர்)
முன்னாள் லொறிச் சங்கத் தலைவர்

காலமாகி விட்டார்.

நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகுமார் (லண்டன்), மஞ்சுளா, அஞ்சலா, ஜெயந்தினி, சுரேன், சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து 11-12 1986 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

பருத்தித்துறை வீதி,
3ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்

## பஸ் ஊழியர் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எவருடைய போராட்டத்துக்கும் குறுக்கே நிற்க ஊர்காவல் படை அமைக்கப்படவில்லை.

எனது பாதுகாப்புக் கருதி ஊர்காவல் படை அமைக்கப்படவில்லை.

வேலையற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்கவே ஊர்காவல் படையை அமைத்தேன்.

ஏனைய பிரதேசங்களில் தீவிரவாதிகளுக்கு எதிராக போராடும் அரச ஆயுதபடையிருக்கு ஊர்காவல் படையினர் உதவுகின்றனர். காத்தான்குடியில் அந்த நிலை இல்லை.

காத்தான் குடிச் சம்பவத்தில் இறந்த தமிழருக்காக நான் வருந்துகிறேன். அவர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்க முயற்சிப்பேன்.

தொழில் இழந்த சலவை, சலூன் தொழிலாளர்களுக்கு அரச நிவாரணம் பெற்றுக் கொடுக்க முயற்சிப்பேன். இல்லையேல் முஸ்லிம் தனவந்தர்களைக் கொண்டு உதவுவேன்.

ஊர்காவல் படை அமைக்கப்பட வேண்டும் என்று விரும்பிய காத்தான் குடிப் பிரமுகர்கள், இப்போது வேண்டாம் என்றால் நான் நிச்சயம் ஊர்காவல் படையைக் கலைத்து விடுவேன்.

இப்படி ஜனுப் றிஸ்லி சின்னலெப்பை சொன்னார்.

மட்டக்களப்புப் பிரசைகள் குழுச் செயலாளர் சாம் தம்பிமுத்து சொன்னதாவது;

ஊர்காவல் படையினர் ஆயுதப்படையின் ஓர் அங்கமே.

அரச சம்பளம் பெறும் ஊர்காவல் படையினர், அப்பாவிகளை கொல்வது எந்த வகையில் நியாயம்?

ஊர்காவல் படை தேவை என்று காத்தான் குடி மக்கள் இனியும் கருதுவார்களானால் அப்பாவிகளைக் கொல்வதில் பங்காளிகளாக அவர்களையும் கருத நேரிடும்-இப்படி திரு. தம்பிமுத்து சொன்னார்.

பிரசைகள் குழு உபதலைவர் வண பிதா சந்திரா பெர்னாண்டோ பேசுகையில், மக்களுக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றால் தொழிற்சாலைகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமே ஒழிய ஊர்காவல் படையை அமைப்பதல்ல சரியான வழி - என்று தெரிவித்தார். (இ-21)

## திருமலையில் மூவர் பலி

# விறகு வெட்டி வந்த பொதுமக்கள் மீது சிப்பாய்கள் சூடு

யாழ்ப்பாணம், டிச. 11

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாவெளியில் விறகு வெட்டிக் கொண்டுவந்த பொதுமக்கள்மீது சிப்பாய்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

இதனால் மூன்றுபேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் நடைபெற்றது.

இப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது. (இ-10)

## நிலத்தில் இருந்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல வேண்டாம் என போராளிகள் கேட்டுக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து பரந்தனில் உள்ள வீடொன்றில் தற்காலிகமாக ஊழியர்களை இயக்கும்படி பணித்து விட்டு மேலிடத்துடன் தொடர்புகொள்ள முகாமையாளர் கொழும்பு சென்றார்.

அந்த வீட்டிலோ தளபாடம் ஏதும் இல்லாததால் ஊழியர்கள் நிலத்தில் இருந்து கடமை புரிகின்றனர்.

இராணுவத்தினர் வங்கிக் கிளையை மீண்டும் பழைய இடத்திலேயே திறந்து இயக்க வேண்டும் என பணிக்கின்றனர்.

போராளிகள் அங்கே பாதுகாப்பு இல்லை என மறுக்கின்றனர்.

இந்நிலையில் வங்கி ஊழியர்கள் ஏதும் செய்ய முடியாத நிலையில் தவிக்கின்றனர். (இ-5)

## சுவீப் முடிவுகள் . . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆறுதல் பரிசுகள்
(32 ஹீரோ சைக்கிள்கள்)

| | |
|---|---|
| Q- 200330 | X- 202752 |
| Y- 202035 | R- 203039 |
| J- 201797 | F- 202160 |
| F- 201620 | H- 203545 |
| L- 200875 | G- 201132 |
| W- 202710 | T- 202944 |
| F- 202932 | E- 203297 |
| U- 203672 | R- 201543 |
| N- 202217 | V- 202003 |
| L- 201187 | M- 200329 |
| X- 202289 | Q- 202159 |
| K- 203858 | D- 200952 |
| R- 200700 | J- 200652 |
| N- 203498 | X- 201237 |
| W- 202759 | V- 203562 |
| V- 202321 | F- 202691 |

## இடமாற்றம்

யாழ்ப்பாணம்டிச 11

அடுத்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து யாழ் திட்டமிடல் பணியக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சரோஜினி கணேந்திரன் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இவரது இடத்திற்கு உடனடியாக எவரும் இதுவரைதெரிவு செய்யப்படவில்லை என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-5)

## உணவில்----

(3ம் பக்கத் தொடர்ச்சி(

ராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்

ஊரெழு கணேச வித்தியாசாலையில் திரு. சி. சக்திகிரீவன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராஜா பேசுகையில், செம்மண் உள்ள பிரதேசங்களில் பாரிய கட்டடங்களும் தொழிற்சாலைகளும் அமைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

இன்று பல பொருள்கள் தெரியாமல் போவதுபோல குளங்களும் அழிந்து போகின்றன. இந்நிலை எமது நிலவளத்தையும், நீர் வளத்தையும் பாழடையச் செய்யும் என்றார்,

பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ பா. வைத்தியநாத சிவாச்சாரியாரின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையாற்றிய திரு சி. சக்திகிரீவன், தமிழர் பண்பாடு பேசும் விழாக்களை தெற்கிலிருந்து வந்த விழாக்களாக கருதும் மனோநிலை மாறவேண்டும் என்றார்.

மற்றும் பலரும் உரையாற்றினர். (இ - 27)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இலக்கம் 19 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 11-12-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 19 Second Lane Power House Road JAFFNA Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 69 N 86. T'Phone No. 24805, 22075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org